உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

# மனுஷ்ய தர்மம்

=========

ப்ரசுரம் 9

========

புரட்டாசிமீ 17உ, வெள்ளிக்கிழமை

3-10-1947

---

வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை,

(Regd.)

கும்பகோணம்

---

(விலை அணா ஒன்று)

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

# மனுஷ்ய தர்மம்

-----o-----

உலகத்திலுள்ள ஜீவர்கள் பிராணிகளெனப்படும். பிராணனுடையவை பிராணிகள், பிராணன் என்பது உயிர். ஆகவே உயிருள்ளனவெல்லாம் பிராணிகள் என்று சொல்லப்படும். உயிருள்ள பிராணிகள் எல்லாம் எப்பொழுதும் காரியங்களைச் செய்து கொண்டேயிருக்கின்றன. ஒவ்வொரு பிராணியும் ஸதா ஏதாவது ஒரு காரியத்தைச் செய்துகொண்டேயிருக்கிறது. எறும்பு ஸதா ஊர்ந்துக்கொண்டேயிருக்கிறது. பறவை பறந்துகொண்டோ, உணவு தின்றுகொண்டோ இருக்கிறது. மனிதன் ஆபீசுக்குப்போய் வேலை செய்கிறான். இல்லையென்றால் உழுது பயிரிடுகிறான். இவற்றைப் போல வேறு பல காரியங்களை செய்துகொண்டேயிருக்கிறான். ஒருவராவது காரியம் செய்யாமல் இருப்பதேயில்லை. இந்த விஷயத்தையே பகவான் கீதையில் சொல்லியிருக்கிறார்;-

ந ஹி கஷ்சித் க்ஷணம்பி ஜாது திஷ்டத் யகர்மக்ருத்

(கீதை, III-5)

ஒரு மனிதன் கூட ஒரு ஸமயத்திலாவது ஒரு காரியத்தையாவது செய்யாமலிருப்பது இல்லை, என்பது இதன் கருத்து

இப்படி மனிதன் ஸதா காரியங்களைச் செய்துகொண்டேயிருப்பதைப் பிரபஞ்சத்தில் நாம் பார்த்துவருகிறோம். சிறிய ஊரிலுள்ளவனுக்குக் கொஞ்சம்தான் காரியங்கள் இருக்கின்றன. பெரிய ஊரிலுள்ளவனுக்குக் கணக்கில்லாத காரியங்கள் இருக்கின்றன. ஏன் இவ்வாறு எல்லாரும் காரியங்களைச் செய்துகொண்டேயிருக்க வேண்டும்?

நாம் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்துகொண்டேயிருந்தால் தான் கஷ்டப்படாமல் இருக்கலாம். கஷ்டப்படாமலிருப்பதை உத்தேசித்துப் பல காரியங்களைச் செய்யவேண்டும். காரியங்கள் இல்லாமல் சும்மா இருப்பதைப்போன்ற கஷ்டம் வேறு இல்லை. இப்படிக் காரியஞ்செய்வதற்காக நம்முள்ளே ஒன்று தூண்டி வருகிறது. யாரோ ஒருவர் பசி என்று ஒன்றை எல்லாருக்கும் வைத்து விட்டார். அந்தப்பசி மனிதனை, "காரியஞ்செய்", "காரியஞ்செய்" என்று தூண்டிக்கொண்டேயிருக்கிறது. காரியஞ் செய்யாமல் இருந்துவிட்டால் வயிறு பக் பக்கென்று பசிக்கிறது. அந்தப்பசியாகிய வியாதிக்கு மருந்து தேடி நாம் காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. தலைவலி நமக்கு வந்தால் உடனே மருந்துபோட்டால் போய்விடுகிறது. அப்புறம் எப்பொழுதாவது பலநாள் கழித்து வருகிறது. இந்தப் பசி என்கிற வியாதியானது அப்படியல்ல. மருந்து போட்டால் அப்புறம் பலநாள் வராமல் இருக்கும். மற்ற வியாதிகளுக்கும் இந்த வியாதிக்கும் நிரம்ப வித்தியாசம் உண்டு. இந்த வியாதிக்கு வேளைதோறும் மருந்து கொடுத்துக்கொண்டேயிருக்கவேண்டும். இந்த வியாதிக்கு மருந்து தேடித்தான் ஒவ்வொருவரும் காரியம் செய்யவேண்டும். புலி மானை அடிப்பதும், பூனை எலியைப்பிடிப்பதும், பாம்புதவளையைப் பிடிப்பதும், இந்த பசியாகிற

வியாதியைத் தீர்த்துக்கொள்வதற்காகவே. மனிதன் பலவகை வேஷங்களைபோட்டுக் கெட்டிக்காரத்தனம் எல்லாம் பண்ணி ஸம்பாத்யம் செய்வதும் இதற்காகவே. பசியாயிருந்தால் அரிசி தேடிச் சாதம் சமைத்துக்கொள்கிறான். அரிசிக்காக காரியம் செய்கிறான். உடம்பை வைத்திருக்கவேண்டுமானால் காரியம் செய்து கொண்டியிருப்பதும் அவசியம். க்ஷணநேரமாவது காரியஞ்செய்யாமல் இருக்கமுடியாது.

வேலை செய்யாமலேயிருந்தால் இந்த உடம்பு ப்ரயோஜனமில்லாமல் போய்விடும். பணக்காரனாயிற்றே, வேலை ஏன் செய்யவேண்டும், என்பது இல்லை. அவனுக்குத்தான் அதிக காரியங்கள் இருக்கின்றன். பணம் கொடுத்த இடத்தில் அது ஜாக்கிரதையாயிருக்க வேண்டும், என்று அவனுக்கு ஸதா கவலை. ஆகையால் அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்துகொண்டேயிருக்கிறான். ஓர் உஞ்சவிருத்தி ப்ராஹ்மணனைக் காட்டிலும் பத்துலட்சரூபாய் சொத்து உடையவனுக்கு அதிக வேலை. அவன் செய்துகொண்டிருக்கிற வேலைக்கு முடிவேயில்லை.

இப்படி மனிதன் செய்யும் வேலைகள் பலவகையாக இருக்கின்றன. தன் உடம்புக்காக அவன் செய்யும்வேலைகள் ஒருவகை; தன்னைச்சேர்ந்தவர்களுக்காகச்செய்யும் காரியங்கள் மற்றொருவகை. குழந்தை, பெண்ஜாதி, தகப்பனார், தாயார் முதலிய சிலபேர் அவனிடம் ஒப்படைப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்காகச் செய்யவேண்டிய சில வேலைகள் உண்டு. அவற்றிற்குப்பின், அவனுடைய சொந்த மாடு, சொந்த நாய், கொஞ்சம் அபிமானம் அதிகமானால் ஒரு பூனை, அவனுடைய வேலைப்பார்க்கும் குடியானவன், வேலைக்காரன் முதலியவர்களைப் போன்றவர்களுக்காக சில வேலைகள். இவற்றிற்கப்புறம், கிராமஸமுதாய ஸம்பந்தமான வேலைகள் வேறு இருக்கின்றன. வீட்டைச்சுத்தமாக மெழுகி நன்றாக வைத்துக்கொள்வது வீட்டிலுள்ளவர்கள் பொறுப்பு. பத்துப்பேர் சேர்ந்தது ஒரு குடும்பம். ஆயிரம்பேர் சேர்ந்தது ஒரு கிராமம். குடும்பக் காரியங்கள் எப்படி மனிதனுக்கு அவசியமோ, அப்படியே கிராம ஸமுதாய காரியங்களும் அவசியம். அப்புறம் தேச ஸமுதாயத்திற்காகச் செய்யும் காரியங்கள் பல.

இப்படிப் பிரிக்கப்பட்ட காரியங்களில் பல் தேய்த்தல், வேஷ்டி தோய்த்தல், ஸ்நானம் செய்தல், சாப்பிடுதல் முதலியவற்றைப் போன்ற காரியங்கள் தன் சொந்த பிரயோஜனத்தைப் பற்றிச் செய்யப்படுபவை. வீடுகூட்டுதல், மெழுகுதல், வீட்டுக்கு வேண்டிய உபகரணங்களை ஸம்பாதித்தல் முதலியவை வீட்டுக்காகச் செய்யப்படுபவை; அதாவது தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்குமாகச் செய்யப்படுபவை. வாய்க்கால் வெட்டுதல், ஏரியைச் செப்பனிடுதல், கிராமத்தில் ஆஸ்பத்திரி கட்டுதல், வியாதியைப் போக்கத்தக்க ஏற்பாடுகள் செய்தல் என்பவற்றைப் போன்றவை கிராம ஸமுதாய ஸம்பந்தமான காரியங்கள். தேச ஸமுதாயமான காரியங்கள் இந்தக் காலத்தில் நன்றாகத் தெரியும்.

நாம் செய்யும் காரியங்களில் நம் வயிற்றுக்கு மாத்திரம் சாப்பாடு போடும் வகையையன்றி மற்றவர்களையும் ஸம்ரக்ஷிக்கும் காரியங்களும் உண்டு. சக்தி உள்ளவர்கள் அசக்தர்களைக் காப்பாற்றுவது உலக இயற்கை. அசக்தர்கள் சக்தியுள்ள வேறொருவர் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார்கள். குழந்தையை சக்தியுள்ள மனிதன் போஷித்து வருகிறான். அவன் கிழவனாகி அசக்தனாகும்பொழுது பெரியவனாகிய அந்தக் குழந்தையால் போஷிக்கப்படுகிறான். இப்படி மாறி மாறி வருவதே உலகத்தில் இயற்கையாக இருக்கிறது. இந்த ஸ்வபாவம் மனிதனிடத்தில் மட்டுமல்ல; பசு பக்ஷிமுதலிய எல்லாப் பிராணிகளிடத்திலும் காணப்படுகின்றது. பக்ஷிகளும் மிருகங்களும் குஞ்சுகளையும் குட்டிகளையும் ஸம்ரக்ஷித்துக் கொள்ளுகின்றன. புழு, பூச்சி, பூனை, குரங்கு முதலிய எல்லாவகைச் சிறிய பிராணிகளிடத்திலும் இந்த ஸ்வபாவம் காணப்படுகிறது.

உலகம் முழுவதிலும் காரியங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. பலவகையான காரியங்களை மனிதன் செய்கிறான்; ஒவ்வொன்றிலும் ஈடுபடுகிறான்; பணம் ஸம்பாதிக்கிறான்; கூட்டுறவு (Co-operation) தேடுகிறான்; வாய்க்கால் வெட்டுகிறான்; தேஹ ஆரோக்கியசாலைகளை அமைக்கிறான்; ராஜாங்கத்தைக்கவனிக்கிறான்; ஜனக்கஷ்டத்தைப் போக்க வழி தேடுகிறான். ஸ்வயநல பரித்யாகம் செய்து இப்படிப் பொதுவான காரியங்களோடு தனக்கு வேண்டிய காரியங்களையும் பார்த்துக்கொள்கிறான். வயலுக்கு போகிறான்; ஆபிஸில் வேலைபார்க்கிறான். இப்படி பணம் ஸம்பாதிப்பதற்காகப் பல காரியங்கள் செய்கிறான்.

மனுஷ்யனுக்கு அவசியமாக வேண்டியிருப்பவை மூன்று வகைப்பொருள்களே. பசியைப் போக்கிக்கொள்ள ஆகாரம் வேண்டும். பின்பு வெயில், குளிர் இவைகளைத் தடுத்துக்கொள்வதற்கும், மானம் காப்பதற்கும் வஸ்த்ரம் வேண்டும். களைப்புத் தீர இருப்பதற்கும் ஒரு ஆவரணம்--இடம் வேண்டும். இந்த மூன்றும் மற்ற எல்லா பொருள்களையும் விட மிகவும் அவசியமானவைகள். இந்த அவசியமான பொருள்களுக்குமேல் அவன் சேகரிக்கும் பொருள்கள் குழந்தைகள் ரக்ஷணத்திற்கும், அவர்களுடைய விவாகம் முதலியவற்றிற்கும் உபயோகமாக இருக்கின்றன.

மனிதனுக்கு வேண்டிய அவசியமான பொருள்களை பெறுவதிற்கு அவன் செய்யும் காரியங்களைத் தவிர வேறு சில காரியங்களை செய்யவேண்டியிருக்கிறது. தினமும் ஆஹாரத்தை ஸம்பாதித்துக் கொள்வதும், வீடு இடிந்து விட்டால் அதைக் கட்டிக்கோள்வதும், வஸ்த்ரம் கிழிந்தால் தைத்துக் கொள்வதும் அவனுக்கு அவசியமானவை. ஆனால் தன்பால்
ஒப்படைக்கப்பட்ட வேறு சில ஆத்மாக்களுடைய அவசிய பொருள்களையும் அவன் சம்பாதித்துத் தருகிறான். அந்த நித்ய வியாதியாகிற பசிக்கு ஆஹாரம் ஸம்பாதித்துத் தானும் உண்டு பிறருக்கும் தருகிறான். பசியை வியாதியாகவும், சாப்பாட்டை மருந்தாகவும் சொல்வதில் ஒரு விசேஷம் இருக்கிறது.

க்ஷ˜த்வ்யாதிச்ச சிகித்ஸ்யதாம் ப்ரதிதினம் பிக்ஷௌஷதம் புஜ்யதாம்
ஸ்வாத்வன்னம் ந து யாச்யதாம் விதிவஸாத் ப்ராப்தேந ஸந்துஷ்யதாம்மி
ஔதாஸீந்யம்பீப்ஸ்யதாம் ஜநக்ருபாநைஷ்டுர்யம் உத்ஸ்ருஜ்யதாம்
ஸீதோஷ்ணாதி விஷஹ்யதாம் ந து வ்ருதா வாக்யம் ஸமுச்சார்யதாம்மிமி

(ஸாதன பஞ்சகம், 4-வது ச்லோகம்)

பசி என்னும் வியாதிக்கு வைத்தியம் பண்ணிக்கொள், என்று ஸ்ரீ ஆசார்யாள் இந்த ச்லோகத்தில் கட்டளையிடுகிறார்கள். வியாதி நிவ்ருத்திக்கு எவ்வளவு மருந்து அவசியமோ அவ்வளவுதான் வியாதியுடையவன் சாப்பிடுவான். நாக்குக்கு ருசியான மருந்தைத் தேடிச் சாப்பிட்டுக்கொண்டே யிருக்கமாட்டான். தவிர அதிக விலை கொடுக்காமல், குறைந்த விலையுள்ள மருந்து கிடைக்குமாகில் அதையே வாங்கிச் சாப்பிடுவான். அதைப்போல் பசிக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவே சாப்பிடவேண்டும். ஸாதாரணமான சாப்பாடு இருந்தால் போதும், என்பதே முன்சொல்லிய ச்லோகத்தின் உட்கருத்து.

இப்படி மனிதன் தனக்காகச் செய்துகொள்ளவேண்டிய பல காரியங்களையும், தன்னைச்சேர்ந்தவர்களுக்காக செய்யவேண்டிய பல காரியங்களையும் தவிர, வேறு சில விசித்ரமான காரியங்களைச் செய்து வருகிறான். அந்த அதிகப்படியான வேலைகளிற் சிலவற்றைப்பற்றிக் கீழே சொல்லப்படுகிறது. ஒருவன் சிலுவை என்று ஒன்றை வைத்துக்கொள்கிறான். 'சர்ச்' (சிலீஹுக்ஷீநீலீ) என்ற ஓர் இடத்தைக் கட்டிக் கொள்கிறான். அங்கே இவனுடைய பசியைப் போக்கக்கூடிய பதார்த்தம் ஒன்றும் கிடையாது.

மற்றொருவன் ருத்ராக்ஷம் அணிந்துகொண்டு, நிறைய விபூதியை பூசிக்கொள்கிறான். அவற்றால் அவன் பசி நீங்குமா? வஸ்த்ரத்திற்கு ஏதாவது பிரயோஜனம் உண்டா? வேறொருவன் நாமக்கட்டியைக் குழைத்து வைத்துக்கொண்டு திருச்சூர்ணத்தை இட்டுக்கொள்கிறான். முன்பு சொன்ன அவசியமான காரியங்களில் இவை சேரா. இவற்றால் வயிற்றுக்கும் பிரயோஜனமில்லை; வஸ்த்ரத்திற்கும் பிரயோஜனமில்லை; வீட்டிற்கும் பிரயோஜனமில்லை; சேர்ந்தவர்களுக்கும் பிரயோஜனமில்லை. இவை அதிகப்படியான காரியங்கள். ஒருவன் ஏதோ ஒரு பஞ்சபாத்திரத்தையும் உத்தரணியையும் எடுத்துக்கொண்டு லொட லொட என்று சப்தம் பண்ணி ஏதோ செய்கிறான். ச்ராத்தம் என்று ஒன்று செய்கிறான். ப்ராஹ்மணர்களைக் கூட்டி வைத்து சாப்பாடு போடுகிறான். இவற்றால் அவன் பசி நீங்குமா? ஒன்றுமில்லை. மலையிலிருந்து கல்லை எடுத்துவந்து கோவில் கட்டுகிறான். அது இவன் தங்குவதற்குப் பிரயோஜனப்படுவதில்லை. ராத்திரியில் பூட்டிவிடுகிறார்கள். மழையில் ஒண்டுவதற்குக்கூட உபயோகப்படுவதில்லை. இதனால் என்ன பிரயோஜனம்?

இன்னம் சிலபேர்கள் மதம் மதம் என்று சொல்லிக்கொண்டு என்னென்ன காரியங்களோ செய்கிறார்கள். சிலபேர் மதத்திற்காக சண்டை போட்டுக்கொள்கிறார்கள். மண்டையை உடைத்துக் கொள்கிறார்கள். இந்த காரியங்கள் எல்லாம் மனிதனுக்கு அவசியமில்லாத அதிகப்படியான காரியங்களாக தோன்றுகின்றனவல்லவா?

விபூதி பூசுதல், ருத்ராக்ஷம் அணிதல், கோவில் கட்டுதல், ச்ராத்தம் செய்தல், பிராஹ்மணஸந்தர்ப்பணம் செய்தல் இவை எல்லாம் மனிதனுக்கு அதிகப்படியான காரியம் என்று சொல்லலாமல்லவா? இப்படி செய்யும் அதிகப்படியான காரியங்களால் என்ன பிரயோஜனம்? போதாக் குறைக்கு பல இடங்களில் பஜனை என்று ஒன்று ஆரம்பித்துக் கூத்தாடுகிறார்கள். தொண்டை வற்றிப்போகிற வேலை. அந்த வேலைக்கும் ஆபீசு வேலைக்கும் ஸம்பந்தமே கிடையாது. அனாவசியமாக அந்த வேலை நடந்துகொண்டே வருகிறது. இவ்வளவு காரியங்களும் அனாவசியமாகவே தோன்றுகின்றனவல்லவா?

இவை அவசியந்தானா? ஏன் இவற்றை செய்யவேண்டும்? இவற்றால் வரும் பிரயோஜனம் என்ன? என்பவற்றை இனி ஆலோசித்துப்பார்க்கலாம்.

மனிதன் ஸம்பாதிப்பானேன்? தினந்தோறும் பசியை ஆற்றிக்கொண்டாலே போதுமே? எங்கேயாவது போய்ச் சாதம் கேட்டால் போடுகிறார்கள்; சத்திரங்களிலும் சாப்பிடலாம். சாப்பாடு கிடைக்கிறதே, ஸம்பாதிப்பானேனென்று நினைத்து சும்மா இருப்பதில்லை. ஒரு வயிறு சாதமும், ஒருபடி அரிசியும், பத்துரூபாய் பணமும் தனித்தனியே வைத்து, இவைகளுக்குள் ஏதாவதொன்றை எடுத்துக்கொள், என்றுசொன்னால் பணத்தைத் தான் ஒருவன் எடுத்துக்கொள்வான். ஏன்? சாதம்தானே வேண்டும்? பணம்எதற்காக? சாதம் ஒருவேளைக்குத்தான் பிரயோஜனம். அரிசி இரண்டு வேளைக்குத்தான் உதவும். பணம் பத்துவேளைக்கு உதவும். அதிக நாளைக்கு உதவக்கூடிய பொருளைத்தான் அவன் அதிகமாக விரும்புகிறான்.

பள்ளிக்கூடம் போகிற பையனுக்குத் தாயார் சாதம் கட்டித் தருகிறாள். கொஞ்சம் தூரமான ஊருக்குப்போனால் அரிசி முதலிய ஸாமான்களைக் கட்டிக்கொண்டு போகிறோம்.

முன் காலத்தில் ரயில் கிடையாது. நினைத்தமாத்திரத்தில் போய்வரவேண்டிய சௌகரியங்கள் இல்லை. ஆனால் அந்த சௌகரியங்களால் நமக்கு நஷ்டம்தான் அதிகமாய் ஏற்படுகிறது. ரயில் சார்சு, சாப்பாட்டு ஹோட்டல் செலவு, பஸ், காபி முதலிய செலவுகள் உண்டு; இவற்றையல்லாமல்

பெரிய ஊருக்குப் போனால் புது ஸாமான்கள் வாங்குவதில் செலவு. இவ்வளவு செலவும் இந்தக் காலத்தில் உண்டாகின்றன. பழைய காலத்தில் எவ்வளவு நாள் வெளியூரிற் பிரயாணம் செய்கிறோமோ அவ்வளவு நாள் அகத்துச் சாப்பாடு லாபம். நடப்பதால் காலுக்குப் பலம்.

இப்படிச் சிறிய செலவில் தந்திரமாகக் காலங்கழிக்கும் பழைய காலத்து மனிதர்களில் ஒருவரைப்பற்றி ஒரு கதை சொல்லுவதுண்டு. பாலக்காட்டுக்கருகில் உள்ள சித்தூர் என்னும் ஊரில் கிருஷ்ணய்யர் என்று ஒருவர் இருந்தார். அவர் ஒரு பெரிய பாங்கு வைத்தார். அந்த பாங்கு வட்டிவருமானத்தினால் 70 பிள்ளைகளுக்குமேல் வேத சாஸ்த்ரங்களைக் கற்றுக்கொடுக்க ஒரு பாடசாலை வைத்தார். அந்தக்காலத்தில் அங்கே படித்தவர்கள் பின்பு வி.கிருஷ்ணஸ்வாமி அய்யர் வைத்திருக்கிற ஸம்ஸ்கிருத காலேஜில் வந்து படிப்பது வழக்கம். இப்படிப் பாடசாலை வைத்தவர்களுள் மற்றொருவராகிய முத்துகனபாடிகள் என்பவர் திருவையாற்றில் இருந்தார். அவர் நூறு நூற்றிருபது பிள்ளைகள் வரையிலும் வேதாத்யயனம் செய்யும்படி ஏற்பாடு செய்தார். எங்கேயாவது அவர்களுக்குச் சாப்பாட்டு வசதிகள் செய்துகொடுத்தார். வேலையிற் பிசகினவர்களுக்கு அபராதம் போட்டு அதை வட்டிக்குவிட்டு அந்தத் துகையையே மூலதனமாக வைத்தார். தாமே சொல்லிக் கொடுத்தார். ஒரு நாள் ஒரு உத்தியோகஸ்தர் அந்தப் பாடசாலைக்கு வந்தார். அவர் அங்கேயுள்ள பிள்ளைகளைப் பார்த்துவிட்டு, "ஐயையோ, அனியாயமாக இவர்களை எல்லாம் குட்டிச்சுவராக்குகிறீர்களே! ஆட்டு மந்தையைப்போலப் பத்து வருஷங்கள் அடைத்துவைத்து என்ன பிரயோஜனம்? இவர்களுடைய ஜீவனத்திற்கு ஒருவழியும் செய்யவில்லையே! இங்கிலீஷ் படித்திருந்தால் நல்லநிலைக்கு வந்திருக்கலாமே!" என்று சொன்னாராம். அப்பொழுது பக்கத்திலிருந்த ஒருவர், "இவர்களை இங்கிலீஷ் படிக்க அனுப்பாமல் இங்கே மந்தை போல அடைத்து வைப்பதனால் பாதிச்செலவு லாபமாகிறது. இங்கிலீஷில் போயிருந்தால் உடுப்பு, கிறாப், சைக்கிள் முதலியவற்றிற்காக இவர்கள் செலவழிப்பது லாபந்தானே! அந்தச்செலவு அவர்கள் ஸம்பாதிப்பதில் பாதியை விழுங்கிவிடும். அந்தச்செலவு இவர்களுக்கு இல்லாமையால் அந்தப்பாதி ஸம்பாத்யம் இருக்கிறமாதிரி தான். மிச்சம் பாதி ஸம்பாதிக்க நாங்கள் சொல்லிக்கொடுத்திருக்கிறோம். இங்கே இவர்கள் வித்தை கற்றுக்கொள்ளாமற்போனாலும் இங்கிலீஷ் பக்கம் திரும்பாமல் இருப்பதனால் லாபம் உண்டு", என்றாறாம். இவற்றால் அந்தக்காலத்தில் சுருக்கமாக செலவழித்துக் கொண்டு பெருக வாழ்ந்தவர்கள் இருந்தார்கள் என்பது தெரிய வருகிறது.

அந்தக்காலத்தில்கூட 50 மைல் தூரம் உள்ள ஓரிடத்திற்குப் போக அரிசி கட்டிக்கொண்டு போனார்கள். பிரயாணதூரம் அதிகப்பட அதிகப்பட நாம் சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டிய பொருள்களும் அதிகப்படுகின்றன.

ஒரு நாள் சாப்பாட்டுக்கு ஸம்பாதித்தால் போதுமே! மறு நாள் சாப்பாட்டுக்கு இப்பொழுது என்ன கவலை, என்றிருப்பதில்லை. மறுநாள் அசௌக்கியம் வந்துவிட்டால் கஷ்டப்படவேண்டுமேயென்று, நாளைக்கும் சேர்த்து இன்றைக்கே சேகரித்துக்கொள்கிறோம். மறுநாள் சௌக்கியத்தை கவனிக்காவிட்டால் பணம் நமக்கு வேண்டாம். சிப்பந்திகளுக்கு சாதமாய் கொடுத்தபோது திருப்தி ஏற்படவில்லை. அரிசியாகக் கொடுத்தால் நல்லதென்று எண்ணினார்கள். வேண்டிய அளவு உபயோகப்படுத்திக்கொண்டு மீதியை விற்றுக் கொள்ளலாமல்லவா? அசடாயிருப்பவன்த்தான் கொஞ்சநாளைக்குப் போதுமானவற்றைப் பெற்றுக்கொள்வான். புத்திசாலி பல நாளுக்கு உபயோகப்படக்கூடியவற்றைப் பெறுவான்.

இப்படியே முன்னாடியே பிற்காலத்திற்கு வேண்டியவற்றைச் சேகரித்து வைக்கிறதில் பின்பு எவ்வளவுநாள் ஸௌக்கியமாயிருக்க வேண்டுமென்று எண்ணுகிறோம்? ஒரு நாளா? ஒரு மாதமா? ஒரு வருஷமா? எவ்வளவு சேகரித்து வைக்கிறோம்? ஆயிரமா? பதினாயிரமா? இன்னம் எவ்வளவு இருந்தாலும் நம் ஸௌக்கியத்திற்கு அனுகூலமே. எவ்வளவுநாள் ஸௌக்கியமாய் வாழவேண்டுமென்பது எல்லோருக்கும் தெரியாது. பரமேஸ்வரன் எழுதிவைத்திருக்கும் நாள்தான் அதற்கு எல்லை. ஆனால் நாம் எப்பொழுதும் ஸௌக்கியமாகவே இருக்க விரும்புகிறோம்.

முன் சொன்ன எல்லைக்குப் பின்பும், எப்பொழுதும் ஸௌக்கியமாயிருக்க இந்தப்பணம் முதலிய உபகரணம் போதுமா? இவை உடம்பு உள்ளவரைக்கும்தான் உதவும். அப்புறம் இதனால் பிரயோஜனமில்லை. நாம் செய்யும் காரியங்களெல்லாம் பிற்காலத்தில் ஸௌக்கியமாயிருப்பதற்குச் செய்கிறோம். எப்பொழுதும் ஸௌக்கியமாயிருப்பதற்குத்தக்க காரியங்களை நாம் செய்யவேண்டும். இப்பொழுது செய்துகொண்டிருக்கும் காரியமும் செய்யவேண்டியவைதாம். அதோடு எப்பொழுதும் கஷ்டமில்லாமலிருக்க ஒருகாரியம் செய்யவேண்டும். நாம் எப்பொழுதும் சாவதில்லை. உடம்புதான் சாகிறது. ஆகையால் எப்பொழுதும் ஸௌக்கியமாயிருக்க ஒரு காரியத்தை இப்பொழுதே செய்யவேண்டும். இறந்தபின்பு கரசரணாகதிகள் இல்லை. பிற்காலத்திற்கு இன்ஷியூர் செய்வதைப்போல, இப்பொழுதே இந்தக் காரியங்களைச் செய்யவேண்டும்.

ஒரு மலையடிவாரத்தில் நாம் இருக்கிறோம். நம்முடைய கையில் ஆயிரம் ரூபாய் பணமிருக்கிறது. அவ்வளவும் சில்லறையாக இருக்கிறது. அப்பொழுது திருடர்கள் வருகிறார்கள். மலைமேல் ஏறி அப்புறம் போய்விட்டால் நமக்குப் பயமேயில்லை. அப்பொழுது ஒருவன் வந்து இந்த ஆயிர ரூபாய்க்கும் நோட்டு வேண்டுமாவென்று கேட்கிறான். நாம் என்ன செய்வோம்? உடனே அவனிடம் சில்லறை மூட்டையை தள்ளிவிட்டு ஆயிரம் ரூபாய் நோட்டு வாங்கிக்கொண்டு துள்ளி குதித்து மலைமேல் ஏறி ஓடிப்போய் விடுவோம். ஆனால் அந்த நோட்டு மலைக்கு அப்புறம் உள்ள தேசத்தில் செல்லும் நோட்டாக இருக்கவேண்டும். அதைப்போலத்தான் இப்பொழுது நம்முடைய கதையும் இருக்கிறது. நமக்கு உள்ள சக்தியைக்கொண்டு பிற்காலத்திற்கு உபயோகமான காரியங்களைச் செய்துக்கொண்டால் நமக்கு கஷ்டமே இராது.

இங்கேதான் ஸௌக்கியமாக இருக்கவேண்டும். அப்புறம் நாம் இருப்பது என்ன நிச்சயம்? என்று ஒருவர் கேட்கலாம். இருந்து விட்டால் அப்புறம் அழுவதா?

இந்தப் பிறப்புக்கு அப்புறமும் நாம் இருக்கிறோம்; அதனால் இப்பொழுதே நல்ல காரியங்கள் செய்யவேண்டுமென்று ஆஸ்திகன் சொல்லுகிறான். அப்புறம் இருப்பது என்ன நிச்சயம், என்று நாஸ்திகன் சொல்லுகிறான். இப்பொழுது நல்ல காரியங்களைச் செய்துவிட்டால் பின்பு இருந்தால் நன்மையுண்டு; இல்லாவிட்டால் நஷ்டம் ஒன்றுமில்லை. இரண்டு பக்ஷத்திலும் ஆஸ்திகனுக்கு கஷ்டமே இல்லை. பின்பு நாம் இருப்பது உண்மையானால் சும்மா இருந்த நாஸ்திகன் பாடு தான்
திண்டாட்டம்.

ஆகையால் நல்ல காரியங்கள் செய்வது எப்பொழுதும் நல்லதுதான். நாம் ஓர் இடத்திற்குப் பிரயாணம் செய்யவேண்டுமானால் மனம் சந்தோஷமாக இருக்கவேண்டும். இந்த சரீரத்தை விட்டுவிட்டு ப்ரயாணம் செய்யும்பொழுது, வழியில் கஷ்டத்தைப் போக்கிக்கொள்ளும் காரியத்தை செய்யாமலிருந்தால், நமக்கு கஷ்டம் ஏற்படும். அவ்வாறு ஏற்படாமல் காத்துக்கொள்வதற்கு உரிய காரியங்களை ஞானமார்க்கத்தால் அறியலாம். இப்பொழுது செய்யும்

கர்மாக்களுக்கு இப்பொழுது பலன் இல்லாவிட்டாலும் பின்பு உண்டு. நியூடன் (Newton) சொல்லிய உண்மையை வெகு காலத்திற்கு முன்பே ஆத்மா விஷயத்தில் நம் பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒரு சக்திக்கு பிரதிபலன் (Re-action) எப்பொழுதும் உண்டு, என்னும் கொள்கையை நம்முடைய சாஸ்த்ரங்கள் நன்றாகச் சொல்லுகின்றன.

கிறிஸ்துவர்கள் ஜன்மாந்திரத்தை ஒத்துக் கொள்வதில்லை. ஆனால் அவர்கள் சொல்லும் சில ஸமாசாரங்கள் அவர்கள் தங்களை அறியாமலே ஜன்மாந்திரத்தை ஒப்புக்கொண்டவர்கள் என்பதைக் காட்டுகின்றன. அவர்கள் இந்த உடம்பை விட்டு நீங்கிய பின்பு நியாயத் தீர்ப்பு ஒன்று நடக்கிறதாகவும், பின்பு ஜீவன் நரகத்தையோ, ஸ்வர்க்கத்தையோ, செய்த கர்மாக்களுக்குத் தக்கபடி அடைகிறானென்றும் சொல்லுகிறார்கள். ஸுகதுக்க அனுபவம் பெறுவதற்குரிய இந்தத் தேகம் இங்கே பெட்டியில் கிடந்தாலும், வேறொரு தேகத்தில் இருந்து அவற்றை அனுபவிப்பதாக அவர்கள் சொல்லுகிறார்கள். அதைத்தான் நாம் ஜன்மாந்திரம் என்கிறோம். அந்தத் தேகத்தில் ஸுகதுக்கங்களை அனுபவிப்பதற்கு முன்பு, அவற்றிற்கு காரணமான கர்மாக்களை செய்த இந்த ஜன்மம் எப்படி உண்டோ, அதேமாதிரி இந்த ஜன்மத்தில் ஸுகதுக்கானுபவங்களுக்கு ஹேதுவான கர்மாக்களுக்குரிய ஒரு பிறப்பு இதற்கு முன்பும் இருக்கவேண்டுமல்லவா?

இந்த ஜன்மத்திற்குப் பின்பும் உபயோகப்படக்கூடிய சில காரியங்கள் செய்யவேண்டுவது அவசியம். எப்பொழுதும் ஸௌக்கியமாக இருப்பதற்காகச் செய்யப்படும் காரியங்கள் தாம் முன்பு அதிகப்படியானவை என்று சொல்லியவை. விபூதி இட்டுக்கொள்ளுதல், ருத்திராக்ஷம் அணிதல், ச்ராத்தம் செய்தல் முதலிய காரியங்கள் நாம் எப்பொழுதும் ஸௌக்கியமாக இருப்பதற்கு உதவும் காரியங்கள். இவற்றைப் போன்ற காரியங்களை எவ்வளவு நாம் அதிகமாகச் செய்கிறோமோ அவ்வளவு அவைகள் நன்மையை உண்டாக்கும்.

உடம்பிருக்கும்பொழுது உபயோகப்படக் கூடிய காரியங்களைத் தவிர அதற்குப் பின்பும், பல கோடி வருஷங்களுக்கும், எப்பொழுதும் உபயோகப்படக் கூடிய காரியங்களாக நாம் செய்யவேண்டும். இந்த ஊர் நோட் ருஷியா (ஸிஹூஉஉவீணீ) வில் செல்லாது. எல்லா ஊருக்கும் ஒரு ராஜா இருந்தால் அவனுடைய முத்திரையுள்ள நோட்டு எங்கும் செல்லும். இந்த பதினான்கு லோகங்களுக்கும் ஒரு ராஜா இருக்கிறான். அவன் தான் பரமேச்வரன். அவனுடைய ஸகல ராஜ்யங்களிலும் செல்லும் நோட்டு ஒன்றிருக்கிறது. அது எப்பொழுதும் எவ்விடத்திலும் செல்லும். அது எது? அதுதான் தர்மம்.

ராமன் காட்டுக்கு போவதற்கு முன்பு கௌஸல்யா தேவியிடம் விடை பெற்றுக்கொள்ள போனான். ஊருக்கு போகும் குழைந்தைக்கு தாயார் பக்ஷணம் கட்டிக்கொடுப்பது வழக்கம் அல்லவா? பதினான்கு வருஷம் போயிருக்கவேண்டிய குழைந்தைக்கு என்ன கொடுப்பது? அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. நிறம்ப ஆலோசித்துச் சொல்லுகிறாள்.

> யம் பாலயஸி தர்மம் த்வம் த்ருத்யா ச நியமேன ச ந்ீ
> ஸவை ராகவஸார்துல தர்மஸ்த்வமபிரக்ஷது ந்ீந்ீ
> [அயோத்யா காண்டம், 25-3]

"ஏ ராகவா! நான் உன்னை ரஷிக்க ஒன்றும் செய்வதிற்கில்லை. தர்மம் ஒன்றுதான் இருக்கிறது. தைர்யமாகவும், ஒரே ரீதியாகவும், நியமமாகவும் எந்த தர்மத்தை நீ பாதுகாத்து வருகிறாயோ அந்த தர்மம் தலைகாக்கும். அது ஒன்றுதான் நான் செய்யும் அனுக்ரஹம்", என்றாள். தர்மம் நம்மால் ரஷிக்கப்பட்டுப் பின்பு அது நம்மை ரஷிக்கிறது. ராமனுக்கு எந்த தர்மம் பாதுகாவலாக இருந்ததோ அந்த தர்மம்தான் ஈச்வரனுடைய அகண்ட

ராஜ்யத்தில்ல செல்லக்கூடியது. நாம் வழக்கமாக, குழைந்தை, தகப்பனார், ஊர், தேசம் முதலியவைகள் சம்பந்தமாகச் செய்கின்ற காரியங்களோடு, ஆத்மாவுக்கு நிரந்தரமான இன்பத்தைத் தரும் காரியத்தை செய்யவேண்டும். அந்த காரியம் எப்படி இருக்கவேண்டும் என்பதை விசாரிப்போம்.

நாம் செய்கின்ற காரியத்தை ஈச்வரனுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும். ஞானத்திற்கெல்லாம் பெரிய எல்லை பரமேச்வரன். அவனுக்கு நாம் செய்யும் காரியத்தை அர்ப்பணம் செய்துவிட்டால் அந்த காரியம் நிரந்தரமான இன்பத்தைத் தரும். அந்த காரியம் புதிதாக இராமல் பரம்பரையாகப் பெரியவர்கள் செய்து காட்டியதாக இருந்தால், மிகவும் சுலபமாயிருக்கும். கெட்ட காரியமாக இருந்தாலும், நமது காமக்ரோதத்தின் பொருட்டுச் செயல்படாமல், நமது வயிற்றுக்காக செய்யப்படாமல், அதிகப்பட்ட ஒரு காரியமாக செய்யப்பட்டு, பரமேச்வரனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டால் அது தர்மந்தான்.

எந்த தர்மத்தை நாம் அனுஷ்டிப்பது? பல காலமாக பரம்பரையாகப் பெரியவர்கள் அனுஷ்டித்துவந்த தர்மத்தில் நாம் ஊறி இருக்கிறோம். அனுபவத்தில் அவர்கள் நித்ய ஸௌக்யத்தையடைந்திரிக்கிறார்கள். அந்த தர்மத்தை நாம் கடைப்பிடித்தால் போதும். நாமாக ஒன்றைப் புதிதாகப் பிடித்துக்கொண்டால் வீண் அலைச்சல். அது நல்லதோ கெட்டதோ என்ற சந்தேகம். ஆதலினால் முன்பே பெரியவர்கள் அனுஷ்டிக்கப்பட்டு, நமக்கென்று ஏற்பட்ட தர்மத்தை கைக்கொள்வதே நல்லது.

ஆகவே, அதிகப்படியாக உள்ள ஒரு காரியம் வேண்டும். அது நமது வயிற்றுக்காகவோ, நமது குடும்பத்துக்காகவோ, நமது ஊருக்காகவோ, தேசத்திற்காகவோ இருக்கக்கூடாது. அது பரம்பரை க்ரமமாக வந்ததாக இருக்கவேண்டும். அதை ஈச்வரார்ப்பணம் செய்யவேண்டும். அதை தைரியத்துடன் நியமமாக செய்து வர வேண்டும். அதுதான் தர்மம். அதுதான் எப்பொழுதும் ஸௌக்கியத்தைக் கொடுக்கும்.

நாம் பெற்றிருக்கின்ற மனம், வாக்கு, சரீரம் என்ற மூன்று கரணங்களாலும் செய்யும் செயல்கள் எல்லாம் தர்மங்களாக இருக்கவேண்டும். நம்முடைய பணங்களை எல்லாம் தர்மமாகிய நோட்டாக மாற்றிக் கொள்ளவேண்டும். எல்லாவிதச் சக்திகளையும் அந்தத் தர்மத்திலே உபயோகிக்க வேண்டும். அப்படி செய்யும் தர்மம் எந்த காலத்திலும், எந்த இடத்திலும் செல்லும். கௌஸல்யாதேவி ராமனுக்குப் பாதுகாப்பாகச் சொன்னது அதுதான். ராமனுக்கு வந்த ஆபத்து மிகப் பெரியவை. அவற்றையெல்லாம் அந்தத் தர்மத்தால் தான் கடந்தான்.

மனிதன் எப்பொழுதும் மேற்போவதற்குரிய காரியங்களைச் செய்யவேண்டும். பிராணிகளில் மனிதனைத் தவிர மற்றவைகளெல்லாம் குருக்கே வளர்ந்தவை. அவைகளைத் திர்யக்பிராணிகளென்பார்கள். மனிதன்தான் நேரே வளர்பவன். அவனுடைய ரூபம் அவன் உயர்ந்தவன் என்பதைக் காட்டுகின்றது. அவன் தர்மமார்க்கத்தில் இருந்தால் பிராணிகள் கூட அவனை ஆதரிக்கும். அதர்மமார்க்கத்தில் நடந்தால் ஸஹோதரன்கூட விலகிவிடுவான், என்பதை ராமாயண கதையினாலேயே தெரிந்துகொள்ளலாம்.

ராமன் தர்மமார்க்கத்தின் வழி நடந்ததால் மிருகங்களாகிய குரங்குகள்கூட அவருக்கு உதவி செய்தன. ராவணன் அதர்மத்தின் வழி நடந்ததால் தம்பியும் அவனை விட்டு விலகினான். (ராவணன் தன் சொந்த ராஜ்யத்தில் பலவகை சேனைகளோடு இருந்தும் ரக்ஷிக்கப்படவில்லை.) தர்மவானுக்கு எந்த இடத்திலும் ஸௌக்கியம் உண்டு.

ஆதலால், அந்தத் தர்மமே தலைகாக்கும். நம்முடைய காமக்குரோதம் முதலியவற்றின் பொருட்டும், ஜீவனத்தின் பொருட்டும் அல்லாமல் அதிகப்படியாக உள்ளதும், பரம்பரையாக அனுஷ்டிக்கப்படுவதும் ஆகிய தர்மத்தை தைர்யமாகவும் நியமத்துடனும் நாம் செய்துவந்தால், அது எப்பொழுதும் ஸௌக்கியத்தைக்கொடுக்கும்.

இப்படிக்கு,
வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையோம்